**பொத்துவில் பிரதேச சபை - 2023**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொத்துவில் பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொத்துவில் பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 1.6.1 (ஆ) தவிர்த்து முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் மகேந்திரா கெப் வாகனத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 219,500 தொகையான மூலதனச்செலவினம் மீண்டுவரும் செலவீனமாக காட்டப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டு வரை நிதிக்கூற்றில் நிலையான சொத்தின் பெறுமதி இத்தொகையினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | நாட்குறிப்பீட்டு பதிவொன்றினூடாக மூலதனச் செலவீனமாக மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மூலதன செலவீட்டுக்கான அரச உதவு தொகையின் வருடாந்த ஆரம்ப மீதியானது முன்கொண்டு வரப்படாமையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றில் ரூபா 296,937,210 தொகையினால் மூலதன செலவீட்டுக்கான அரச உதவுதொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பதில் தரப்படவில்லை. | ஆரம்ப மீதியை சரியாக முன்கொண்டுவர நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 10,495,411 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 18,181,148 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,500,000 | 3,500,000 | 130,000 | 3,370,000 | 1,625,000 | 1,625,000 | 750,000 | 875,000 |
| (ii) | வாடகை | 19,750,000 | 34,284,358 | 10,941,288 | 23,343,070 | 18,820,000 | 29,462,566 | 7,831,967 | 13,568,608 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 5,010,000 | 5,010,000 | 4,062,720 | 947,280 | 4,910,000 | 2,642,220 | 2,642,220 | 2,267,780 |
| (iv) | ஏனைய வருமானம் | 9,205,000 | 9,205,000 | 4,793,278 | 4,411,721 | 8,705,000 | 5,798,665 | 5,798,665 | 2,906,334 |
| | கூட்டுத் தொகை | 37,465,000 | 51,999,358 | 19,927,286 | 32,072,071 | 34,060,000 | 39,528,451 | 17,022,852 | 19,617,722 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய சந்தை கடையறை வாடகை ரூபா 5,042,520 தொகை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அறவீடு செய்யப்படுகின்றன. | நிலுவை வருமான அறவீட்டினை துரிதப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பொதுச் சந்தையில் காணப்படும் 33 கடையறைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப் பத்திரத்தில் வாடகைதாரர்களின் எந்தவிதமான கையொப்பங்களுமின்றி காணப்பட்டிருந்ததுடன், அவ் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், 17 வாடகைதாரர்களிடமிருந்து நிலுவையில் எவ்வித அறவீடுகளும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அறவிடவேண்டிய ரூபா 1,608,000 நிலுவை வாடகையினை சட்ட நடவடிக்கை மூலம் அறவிடுவதற்கு சபையினால் முடியாமலுள்ளன. | கடந்த காலங்களில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படாமை யினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளது. எனினும் இணக்கப்பாட்டின் மூலம் நிலுவைகளை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. | பொருத்தமான முறைமைகளை உருவாக்கி நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சர்வதேச தொண்டு நிறுவனமொன்றினால் 2013 ஆம் ஆண்டில் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த டபிள் கெப் வாகனத்தின் உரிமை மாற்றப்பட்டிருக்காத காரணத்தினால் 2022 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகி திருத்தத்திற்காக ரூபா 235,000 தொகை காப்புறுதியினை பெற முடியாது சபை நிதியிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | உரிமை மாற்றம் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தங்களுக்கு அறிக்கை செய்யப்படும். | உரிமையினை மிக விரைவாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 11 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் ஒரு சில வாகனங்கள் தவிர ஏனைய அனைத்து வாகனங்களின் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளன. | உரிமை மாற்றப்படாத வாகனங்களை பட்டியல்படுத்தி விரைவாக சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 யூலை 20 ஆந் திகதியில் ரூபா 14,693,782 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒயில் எக்ஸ்பெல்லர் (Oil Expeller), ஒயில் பில்லர் (Oil Filter), கொப்ரா றையர் (Coprara Dryer), ஸ்கேன் இயந்திரம் (Scale Machine), கொப்ரா கட்டர் (Copara Cutter) மற்றும் வெற்றுப்போத்தல்கள்(Empty Bottles) போன்ற பொருட்கள் நிறுவப்படாது பாதுகாப்பற்ற இடமொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | பதில் தரப்படவில்லை. | குறித்த நோக்கத்தினை அடைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| நிரந்தர மற்றும் தற்காலிக 21 உத்தியோகத்தர்களிடமிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 785,135 தொகையான கடன் நிலுவைகள் அறவிடப்பட வேண்டியிருந்தும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஊழியர்கடன் பதிவேடானது கடனை பெற்றுக்கொண்ட அனைத்து உத்தியோகத்தர்களின் தகவல்களை உள்ளடக்கி காணப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கையிடப்படும். | குறித்த உத்தியோகத் தர்களிடமிருந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து மிக விரைவாக அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 வாகனங்களின் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 16 வாகனங்களினை திருத்தம்செய்து மீளப்பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. | திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நான்கு வாகனங்கள் பாவனைக்கு உதவாததவையாக கடந்த 8 வருடங்களுக்கு மேல் சபையில் காணப்படுகின்ற போதும், அவற்றை சொத்துக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. | உரிய அனுமதியினை பெற்று சொத்துக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| கடந்த காலங்களில் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 23 தொழில் நிறுவனங்களின் காலாவதியான அனுமதிப் பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு மற்றும் பதிவு செய்யப்படாத தொழில் நிறுவனங்களை இனங்கண்டு பதிவேடுகளை பேணுவதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் சார் அனுமதிப் பத்திரங்கள் பெறப்படவேண்டிய நிறுவனங்கள் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டு அவற்றினைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளளப்படும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கும், புதுப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |